# CONFEDERATION COMITE TAMOUL - FRANCE

## தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்சு


அண்மையில் தொலைக்காட்சிக் கருத்துப்பகிர்வில் புதிய அரசியல் அமைப்பின் இடைக்கால அறிக்கை பற்றிய விவாதத்தில் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்தில் கூறும்போது புலம் பெயர்ந்த தமிழர்கள் 13 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியதும். தாயகம் பற்றி எந்த சிந்தனையும் இல்லாமல் இன்னும் வெளியேறுவதிலேயே இருக்கின்றார்கள் என்ற பொருட்படக் கூறியிருந்ததும், தமிழ் மக்களின் வாக்கில் பாராளுமன்ற இடத்தையும், எதிர்கட்சி ஆசனத்தையும் பெற்றுவிட்டோம், படிப்படியாக தமிழீழ மக்கள் எமக்குத்தந்த ஆணையை பெற்று விடுவோம் என்ற பொய்யான பரப்புரையை செய்து நல்லாட்சி கொண்டு வருவோம் என்று சொன்ன மைத்திரியின் அரசுக்கு துணைபோகின்றவர்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற விடயங்கள், நம்பிவாக்களித்த தமிழ் மக்களை எங்கே ஏமாற்றி கொண்டு செல்லுகின்றார்கள் என்பதை கோடிட்டுக் காட்டிநிற்கிறது.

கொழும்பில் காலமாகிய யாழ் நாகவிகாரை விகாராதிபதியின் உடலானது தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி தமிழ் மக்களின் உணர்வை மதியாது இன, மத நல்லிணக்கத்திற்கு பங்கத்தையும், வெறுப் புணர்வையும் ஏற்படுத்தி யாழ் மண்ணில் தகனம் செய்யப்பட்டதோடு, தமிழினத்தின் இருப்பை மறுதலித்து பல்வேறு சொல்லாடலில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டு இலங்கைத் தீவானது சிங்களவர்களுக்கானதே என்பதை சொல்லிலும் இச் செயலிலும் காட்டியிரு கின்றது பௌத்த சிங்கள தேசம். தாயகத்தில்தான் இந்த நிலையென்ற போதும் புலம்பெயர் தேசத்திலும் தமது இனவிரோத கரங்களைப் பரப்பி தமது இருப்பிற்கு அச்சுறுத்தலாகவுள்ள நாடுகளில் தமது தூதரகங்கள் மூலம் மைத்திரியின் அரசினால் தமிழர்களுக்கு நல்லது செய்வதாக கூறி மக்களை குழப்புவதிலும், அதற்கு எம்மவர்களை உடந்தையாக்கி எவ்வித எதிர்பார்ப்புமின்றி தேசத்திற்காகவும், அந்த மக்களுக்காகவும், நாளைய சந்ததியின் சுதந்திர–வாழ்வுக்காக அர்பணிப்புடன் உழைப்பவர்கள் மீது பழிசுமத்துதல், களங்கமுறச்செய்தல், ஒற்றுமையீனத்தையும், ஏற்படுத்தி நெருக்கடிகளை உண்டாக்குவதிலும் ஐரோப்பிய நாடுகளில் செயற்படும் வீரியமான கட்டமைப்புக்களை உடைக்கும், குழப்பும், செயற்பாடுகளையும் எம்மவர்களைக் கொண்டே அனைத்து நாடுகளிலும் செய்து வருகின்றது. இதில் பிரான்சு நாடானது மற்றைய நாடுகளை விட அதிகமான இடர்களையும், நெருக்கடிகளையும் சந்தித்தபோதும் துன்பங்கள் துயரங்கள் யார் தந்தபோதும் இன்பங்களையும், நிம்மதியையும், சந்தோசங்களையும், சுதந்திரத்தையும் மட்டுமே சேர்த்து வைப்போம் என்ற வகையில் தலைவரின் வளர்ப்பில் வளர்ந்த பிள்ளைகளாக, அனை வரையும் இணைத்து இலக்கை ஒர்நேர்கோட்டில் அடையவே நாங்கள் எல்லோரும் உண்மையாகவும், மாவீரர்களுக்கு நம்பிக்கையாகவும், அவர்கள் மீது உறுதியெடுத்து எமது மக்களினதும், இளையவர்களின் பங்களிப்போடு அனைத்து பணிகளையும் ஒருங்கமைத்து வீரியத்துடன் தொடர்ந்து கொண்டு செல்லுவோம்.

புதிய ஆண்டு எமது மக்களுக்கும், எமக்கு கரம் கொடுத்து எம்மை அரவணைத்து வரும் பிரான்சு தேசமும், மக்களும் சந்தோசமாகவும், சுதந்திரமாகவும், நினைப்பவை எல்லாமே வெற்றியாக அமைய புதிய ஆண்டினை நம்பிக்கையோடு வரவேற்று, வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

“ தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் ”

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – பிரான்சு


Siège Social : 116 rue de Belleville75020 Paris. FRANCE

☎ : 01 43 15 04 21, mail : cctamoulefrance@gmail.com